வினா எண். 213, திரு. ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை. டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

213 —

அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு நிலம் அளித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு

* **25075**—*திரு. ஆர். தங்கராசு :*

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு நிலம் அளித்தவர்களுக்குப் பணி கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனைப் பேர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) தற்போது அரியலூர் சிமெண்ட் ஆலையில் பணிபுரியும் 822 பேர்களில் 408 பேர்கள் நிலம் கொடுத்த 382 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இன்னும் 23 குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் நியமனம் கோரும் மனுக்கள் பரிசீலனையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.50

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பல குடும்பங்களுக்கு வேலை அளிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பே நிலம் கொடுத்தவர்கள் ஒரு சிலருக்கு மட்டுமே வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இன்னும் பல நிர்வாகக் காரணங்களைக் காட்டி வேலைவாய்ப்பு இன்னும் ஒரு சிலருக்கு வழங்கப்படவில்லை. எதையும் கருணை உள்ளத்தோடு பரிசீலிக்கும் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு இவர்கள் மேலும் கருணை காட்டி அந்தக் காரணங்களைத் தளர்த்தி இவர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிப்பாரா என அறிய விரும்புகிறேன். அதே சமயத்தில் ஒரு சில நிலம் அளித்தவர்களுக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் குழந்தையை தத்து எடுத்து வளர்த்துக் கொண்டு வருகிறார்கள். அந்த மாதிரி தத்து எடுத்த குழந்தைகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலைக்காக நிலம் கொடுத்தவர்களில் யார் யாருக்கு எல்லாம் வேலை கொடுக்கப்படும் என்பதற்கு அரசாணை எண்.656, வேலைவாய்ப்புத் துறை, நாள் 25-6-1978-ஆம் ஆண்டு ஆணையின்படி தான் இப்போது வேலை கொடுக்கப்பட்டு வருகிறது. பொதுத் துறை நிறுவனத்திற்காக எடுக்கப்பட்ட நிலங்களை ஒரு குடும்பத்தின் முக்கிய வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்தால், அந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்கலாம். இது வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் இல்லாமல் நேரடியாகக் கொடுக்கலாம் என்று அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நில எடுப்பில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதில் நிலச் சொந்தக்காரர் அல்லது நிலத்தை பயிர் செய்து வந்த குத்தகைக்காரர் அல்லது வாரம்தாரர் ஆகியோர் அடங்குவர். உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப் போல் தத்து எடுத்தவர்கள் அந்தப் பட்டியலில் இல்லை. அவர்களுக்கு வேலை கொடுக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 214, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

214—

மாம்பட்டு நெசவாளர்களுக்கு கடன் உதவி வழங்குதல்

* **23943**—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், மாம்பட்டு கிராம நெசவாளர்களுக்குச் சொந்தமாக தொழில்புரிய நடைமுறை மூலதனக் கடன் உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தனியார் நெசவாளர்கள் சொந்தமாக தொழில்கள் செய்ய அரசினால் நடைமுறை மூலதனக் கடனுதவி வழங்கும் திட்டம் தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆகவே இவ்வினா எழவில்லை.